பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

# The EELANADU

மலர் 19 புரட்டாசி 10 ஷவ்வா 12 இதழ் 226
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 26-9-77

## வள்ளம் கட்டும் தொழில்: சிறந்த இடமாக திருமலை!

கொழும்பு, ஞாயிறு வள்ளம் கட்டும் இடங்களில் உலகிலேயே ஒரு சிறந்த இடமாக திருகோணமலை விளங்குகிறது என்று இங்கு வந்துள்ள வெளிநாட்டு நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

படகு கட்டும் நிறுவனம் ஒன்றுக்கு சில படகுகளைக் கட்டிக் கொடுப்பதற்காக ஒல்லாந்தைச் சேர்ந்த படகுகட்டும் நிபுணர்கள் குழு ஒன்று திருகோணமலைக்கு விஜயம் செய்தது.

"திருகோணமலை வள்ளம் கட்டுவதில் உலகிலேயே ஒரு சிறந்த இடமாகவிளங்குகிறது. காலநிலை சீராக உள்ளது. போதுமான தொழிலாளர்களும் இருக்கிறார்கள். வேதனமும் அதிகமில்லை" என்று இக்குழுவினர் கருத்து வெளியிட்டுள்ளனர். படகுகட்டும் தொழிலில் உடனடியாக 750 பேருக்கு திருகோணமலையில் வேலைகிடைக்கிறது.

### 'பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களுக்கு

# 30-ம் திகதிவரை கடமை லீவு வழங்கவேண்டும்'

## இலங்கை ஆ.ச. கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள் "பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களுக்கு இம்மாதம் 30ம் தேதிவரை அரசாங்கம் கடமை லீவு வழங்கத்தவறினால், இலங்கை ஆசிரியர் சங்கம் அகில இலங்கை ரீதியாக நேரடி நடவடிக்கையில் இறங்கவேண்டும்."

வண்ணை வைத்தீஸ்வர வித்யாலயத்தில் நடந்த பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

இலங்கை ஆசிரியர் சங்க யாழ் பிரதேசக் கிளையினால் ஒழுங்கு செய்யப்பட்ட இக் கூட்டத்திற்கு பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கை ஆசிரியர் சங்க, யாழ். மாவட்ட, தலைவர் திரு. எஸ். கே. சுந்தரலிங்கம் தலைமையில்நடந்த இக்கூட்டத்தில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

உக்கிரமான நிலையில் பாதிக்கப்பட்டபிரதேசங்களில் உள்ள ஆசிரியர்களுக்கு தமிழ் பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்படவேண்டும் என்றும் அது [illegible] லீவு வழங்கவேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேறியது.

நேரடியாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நஷ்ட ஈடு அரசு வழங்க வேண்டும் இதில் தாமதம் ஏற்பட்டால் இலங்கை ஆசிரியர் சங்கம் முன்நின்று நஷ்ட ஈடு பெற்றுக் கொடுக்க வேண்டுமென்றும் வன்செயல் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் நடமாட்டம் இருந்தால் அவர்களைக் கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற தீர்மானமும்

(6-ம் பக்கம் பார்க்க)

## "வன்செயல்களை அரசு ஏன் உடன் கட்டுப்படுத்தவில்லை? பொறுப்பை அரசுதான் ஏற்க வேண்டும்" — இ. ஆ. ச. தலைவர்

யாழ்ப்பாணம், திங்கள் "நாட்டில் பல இடங்களிலும் தலை தூக்கிய வன்செயல்களை உடனடியாககட்டுப்படுத்த அரசு தவறிவிட்டது. இதற்கான பொறுப்பை அரசே ஏற்கவேண்டும். மற்றவர்களைக் குறைசொல்வது தவறு"

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நேற்றுநடந்த பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கூட்டத்தில் பேசிய இலங்கை ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. ஏச். என். பெர்னாண்டோ மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மாவட்டக் கிளைத் தலைவர் திரு. எஸ். கே. சுந்தரலிங்கம் தலைமையில் நடந்த கூட்டத்தில் அவர் தொடர்ந்து கூறியதாவது:

"தேர்தலின் பின் நாட்டில் வன்முறைகள் நடைபெற்றன. பின் ஒரு மாதம் கழித்து யாழ்ப்பாணத்தில் பொலிசாரின் அட்டூழியம் நடைபெற்றது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தெற்கில் தொடர்ந்து தமிழ்மக்கள் தாக்கப்பட்டார்கள். இதில் சிங்களர்சரி தமிழர்சரி பாதிக்கப்பட்டது ஏழைகள்தான். குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும்"

"உங்கள் பிரச்னை பற்றி எமது சங்கம், இலங்கை ரீதியாக நடவடிக்கை எடுக்கும். தமிழர் பிரச்னைக்கு சரியான தீர்வுகண்டால்தான் ஐக்கிய இலங்கையை உருவாக்குவது சாத்தியமாகும்.

"தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புபற்றி பிரதமர் பேசுகையில், இலங்கையில் எல்லாப் பிரஜைகளும் சமம் எனத் தெரிவித்தார். இது சிங்களப்பத்திரிகைகளில்வெளியிடப்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆசிரியர் தொழிற்சங்கம் வடக்கில் சிங்களவரை குடியேற்றவேண்டும் என்றும் வடக்கில் சிங்கள மக்கள் பாதிக்கப்பட்டார்கள் என்றும் வெளியிட்ட அறிக்கை சிங்களப் பத்திரிகையில் வெளிவந்தது. பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர் நிலைமை பற்றி விளக்கி இலங்கை ஆசிரியர் சங்கம்தான் முதன் முதலில் சிங்கள பத்திரிகையில் கருத்து வெளியிட்டது. அதன்பின்தான் ஐ. தே. க. ஆசிரியர் சங்கம் அறிக்கை விட்டது.

"வன்செயல்களுக்கு எதிராக உடனடியாக எமது சங்கம் நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் இருந்தது. அநுராதபுரத்தில் சங்க அங்கத்தவர்களின் வீடுகள் சில கலவரத்துக்குப் பின் உடைக்கப்பட்டது. சங்க அங்கத்தவர்கள் கலவரத்தின்பின் தாக்கப்பட்டனர்.

அநுராதபுரத்தில் இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் பொலிசாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். கலவரத்திற்கு இவர்கள் பொறுப்பு என்று காட்ட முயற்சித்துவருகிறார்கள்.

"ஆசிரியர் சங்க காரியாலயத்திலுள்ளவர்கள் தமிழரை காப்பாற்றிப் பெரும் உதவி புரிந்திருக்கிறார்கள். நாங்கள் எல்லோரும் இந்நாட்டில் வாழவேண்டும். எங்களிடம் குறுகிய மனப்பான்மை இல்லை. பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர் பிரச்னை பற்றி அரசை வலியுறுத்த தொழிற்சங்க நடவடிக்கை எடுக்க யதாராக உள்ளோம்" (க)

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, ஞாயிறு கொழும்பில் நேற்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 632-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு:
**26 Q 0032**
ரூபா 1,00,000

2-வது பரிசு:
**33 C 0092**
ரூபா 40,000

3-வது பரிசு:
**24 X 0713**
ரூபா 10,000

ரூபா 1500 ஆறுதற்பரிசுகள் பெறும் 100 டிக்கட்டுகள் விபரம்:

| | |
|---|---|
| 31 A 0972 | 40 A 0891 |
| 14 B 0992 | 15 B 0096 |
| 19 B 0891 | 05 C 0683 |
| 06 C 0244 | 16 C 0820 |
| 18 C 0229 | 40 C 0083 |
| 48 C 0113 | 01 [illegible] 0259 |
| 20 D 0080 | 48 D 0892 |
| 51 D 0984 | 34 D 0569 |
| 42 D 0008 | 13 E 0282 |
| 29 E 0058 | 32 E 0782 |
| 33 E 0701 | 40 E 0927 |
| 45 E 0962 | 57 E 0822 |
| 24 F 0003 | 17 G 0774 |
| 36 G 0906 | 39 G 0853 |
| 40 G 0760 | 59 G 0831 |
| 17 G 0222 | 16 H 0628 |
| 21 H 0144 | 30 H 0383 |

(6-ம் பக்கம் பார்க்க)

## பிரச்னைகிளப்பிய 6பஸ்களும் கொழும்பு திரும்பின

உடுப்பிட்டி, ஞாயிறு பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவில் இங்குள்ள சாரதிகளால் இயக்கமுடியாதிருந்த 'சப்பல்' என்னும் ரகத்தைச் சேர்ந்த ஆறு பஸ் வண்டிகள் மீண்டும் கொழும்புக்குத் திருப்பியெடுக்கப்பட்டன.

இந்த பஸ்வண்டிகளுக்குப் பதிலாக வேறு புதிய பஸ் வண்டிகளைப் பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவிற்குக் கொண்டுவருவதற்காக யாழ்ப்பாண மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சித் தொழிற்சங்கமான ஜாதிக சேவா சங்கமய அமைப்பாளர் திரு கே வி. சரவணபவானந்தனும், பருத்தித்துறை டிப்போ ஜாதிக சேவா சங்கமயவின் செயலாளரான திரு ஆ. கந்தசாமியும் கொழும்பு சென்றுள்ளனர். இவர்கள் இ போ. ச. தலைவருடன் இது பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவர். (அ)

### பங்களாதேஷுக்குஏற்றுமதி:

## உப்பளங்களில் இரவு பகல் வேலை!

யாழ்ப்பாணம், திங்கள் அடுத்தமாத முற்பகுதியில் பங்களாதேஷுக்கு 10,000 தொன் உப்பு ஏற்றுமதிசெய்யும் பொருட்டு ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு, உப்பளங்களில் இரவு பகலாக வேலைகள் இப்பொழுது நடைபெற்றுவருகின்றன.

ஒருலட்சத்து முப்பதினாயிரம் மூடைகளில் உப்பை அடைக்கும் வேலைகளில் சுமார் இருநூறு ஊழியர்கள் கடமையாற்றிவருகின்றனர். அக்டோபர் மாத முதல்வாரத்தில்இந்த உப்பு பங்களாதேஷுக்கு ஏற்றுமதி செய்யப்பட வேண்டும் என்பதால் இரவு நேரங்களிலும் தொடர்ந்து வேலைநடைபெறுகிறது இந்த வேலைகள் வடபிரதேச உப்பள முகாமையாளர் திரு. வி ஆர் செல்வராஜா தலைமையில் உற்பத்தி முகாமையாளர்களான திரு குலசேகரன், திரு. ஜோக்கிம்பிள்ளை ஆகியோரின்நேரடிக் கண்காணிப்பில் நடைபெற்று வருகின்றன.

## நடவடிக்கையின் பின்னரே வேலைக்குத் திரும்பமுடிவு

### தமிழ்த் தொழிற்சங்க கூட்டணி தீர்மானம்

கொழும்பு, ஞாயிறு இதுவரை வேலைக்குத திரும்பாத பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்கள் தொடர்ந்தும் வேலைக்குச் செல்வதில்லையென்று தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணி தீர்மானித்திருக்கிறது.

தமிழ்த் தொழிற் சங்கக் கூட்டணி பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் நிலைகுறித்து நேற்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கூடி ஆராய்ந்தபோது இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

தமிழ் ஊழியர்களைத் தாக்கிய சிற்றூழியர்கள்மீது அரசுநடவடிக்கை எடுக்கும் வரையில் தொடர்ந்தும் வேலைக்குச் செல்வதில்லை என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ் ஊழியர்கள் வேலை

(6-ம் பக்கம் பார்க்க)

### அச்சுவேலி ப. நோ. கூ.ச. கொள்ளை:

## சந்தேக நபர்கள் அடையாளம் காணவில்லை

கொழும்பு, ஞாயிறு அச்சுவேலி ப. நோ. கூ. சங்க கொள்ளைதொடர்பாக, கொழும்பு மூன்றும் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நடந்த அடையாள அணிவகுப்பில் சந்தேகநபர்கள் எவரும் அடையாளம் காட்டப்படவில்லை.

பதில் நீதவான் பருக் முன்னிலையில் நடந்த இந்த அணிவகுப்பில் சந்தேகநபர்களான கனகராசா ரமணாகரன் (16) வயது தவராஜசிங்கம்

(6-ம் பக்கம் பார்க்க)

# "உயிரைப் பணயம் வைத்து வேலைக்குச் செல்வதா?"

## கே. வி. நித்தியானந்தா கேள்வி

யாழ்ப்பாணம், திங்கள்

'இன்றைய அகதிகள் நிலையினையும், தமிழர்கள் தாக்கப்பட்டபோது பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டபங்கினையும், உயிர், உடைமை, கற்பிழந்து ஓடிவந்த இடம்பெயர்ந்த ஊழியர்களுக்கு எதுவுமே நடக்காதது போலவும், தமிழ் அரசாங்க ஊழியர்களை மீண்டும் வேலைக்குவரும்படி அழைப்பது 'அடிக்கும்போது ஓடு, அழைக்கும்போதுவா' என்று கூறுவதுபோன்ற இழிவான நிலையினைக் காட்டுகிறதென தொழிற்சங்கவாதியான திரு. கே. வி. நித்தியானந்தா கூறினார்.

பாதிக்கப்பட்ட தமிழ் மின்சாரசபை ஊழியர் சங்கக்கூட்டம், சுன்னாகத்திலுள்ள இலங்கை மின்சாரசபைக்காரியாலயத்தில் நடைபெற்ற போது திரு. கே. வி. நித்தியானந்தா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

'பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்கள் மீண்டும் வேலைக்குச் செல்ல அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பளிக்கப்படவில்லை, தீங்குவிளைவித்தவர்கள் எந்தவிதத் தண்டனையுமின்றி உலாவி வருகின்றனர். பாதுகாப்பான சூழ்நிலை இன்னும் நாட்டில் உருவாகவில்லை. இந்தச்சூழ்நிலையில் வேலைக்குத் திரும்புவது உயிரைப் பணயம் வைத்து மனைவி மக்களைக் கைவிட்டு செல்வதற்குச் சமமாகும்.

ஒவ்வொருவரும் தன்னலங் கருதி தனிப்பட்ட முடிவுகளை எடுப்பது அநீதியென்றும் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியரின் தாய்ச்சங்கம் எல்லா அங்கத்தவர்களின் தலையையும் கருதியே பணியற்றி வருகிறதெனவும், கழகம் யாரையும் கைவிட்டுவிடாதெனவும் கூறினார்.

கூட்டத்தில் மின்சாரசபை ஊழியர்கள் உடனடியாக வேலைக்குச் செல்வதில்லையென ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். மேற்கொண்டு நிலையினை ஆராய்வதற்கு 28ந்திகதி புதன்கிழமை கூடுவதென முடிவாகியுளளது. (கெ-உ)

# கொஸ்கம பஸ் விபத்து: அபாயநிலையில் 13 பேர்

கொழும்பு, ஞாயிறு

கொஸ்கம பகுதியில் நடைபெற்ற இ. போ. ச பஸ் விபத்துப்பற்றி விசாரணை செய்வதற்கு பொதுக்குழு ஒன்று நியமிக்கப்படவிருக்கிறது.

இவ்விபத்தில் எண்மர் பலியாகினர், 44 பேர் காயமடைந்தனர்.

இவர்களில் 13 பேர் நிலை அபாயகரமாக உள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது.

இ. போ. ச தலைவர் திரு ரவின் ஜெயசூரியா விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்டார். இ. போ. ச. தலைவர் நியமிக்கவிருக்கும் மேற்படி பொதுக் குழுவில் பொலிஸ், இ. போ. ச பொதுமக்களின பிரதிநிதிகள் இடம் பெறுவர். (உ)

மக்கள் வங்கியில்

# தேர்தலுக்குப் பின்வழங்கிய நியமனங்கள் ரத்து

யாழ்ப்பாணம், திங்கள்

தேசிய அரச பேரவை கலைக்கப்பட்ட பின்னர் வழங்கப்பட்ட மக்கள் வங்கி நியமனங்கள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. சென்றமாதம் 31ந் தேதி ஒரு பகுதியினரும், இம்மாதம் 31ந் தேதி மற்றொரு பகுதியினரும் பதவிகளிலிருந்து விலக்கப்பட்டதாக மக்கள் வங்கி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புதிய அரசாங்கம் தேசிய அரச பேரவை கலைக்கப்பட்ட பின்னர் வழங்கப்பட்ட நியமனங்கள் அனைத்தும் அரசியல் நோக்கோடு வழங்கப்பட்டதாகக் கருதி இவற்றை ரத்துச் செய்துள்ளது

இதனால் இதுவரை 828 பேர் பதவிகளை இழந்துள்ளனர். மக்கள் வங்கி புதிதாக 1000 பேரை சேவைக்குச் சேர்க்க இருப்பதால், இவர்களுக்கு தகுதியடிப்படையில் முன்னுரிமை வழங்கப்பட இருப்பதாக தெரியவருகின்றது. (கெ-உ)

## 'பண்ணிசையரசி'

யாழ்ப்பாணம், திங்கள்

மட்டுவில் மகாவித்தியாலய இசையாசிரியையும் சாவகச்சேரியைச் சேர்ந்தவருமான இன்னிசையரசி இசைமணி திருமதி. பூமணி இராசரத்தினத்துக்குப் பண்ணிசையரசி என்ற இன்னொரு சிறப்புப்பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குருமகாசன்னிதானத்தின் 11 வது பீடாரோகண விழாவினை யொட்டிய பட்டமளிப்பின் போது இப்பட்டத்தை ஸ்ரீலஸ்ரீ பரமாசார்யஸ்வாமிகள் வழங்கினார். (கெ-அ)

## பெருமளவில் கருவாடு!

கொழும்பு, ஞாயிறு

இந்தியாவிலிருந்தும் பாகிஸ்தானிலிருந்தும் பெருந்தொகையான அளவுகருவாடு இறக்குமதி செய்யப்படுகிறது

வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி இது பற்றித் தெரிவிக்கையில் பாகிஸ்தானிலிருந்து வந்துள்ள 16,000 அந்தர் கருவாடு இப்பொழுது கொழும்புத்துறை முகத்தில் இறக்குமதி செய்யப்படுகிறதென்றும் இந்தியாவிலிருந்து வந்திருக்கும் 623 அந்தர் கருவாடும் இறக்குமதி செய்யப்படுகிறதென்றும் கூறினார்.

இம்மாதம் 30-ம் திகதிக்கு முன்னர் இந்தியாவிலிருந்தும் பாகிஸ்தானிலிருந்தும் 23,000 அந்தர் கருவாடு இங்கு வந்து சேரும் என்றும் கருவாட்டுத்கட்டுப்பாடு நாட்டில் இனிமேல் நீடிக்காது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## தட்டுப்பாடு

ஜகார்த்தா செப். 25

இந்தோனேஷியாவில் தற்போது அடிப்படை உணவுப் பொருட்களுக்கு பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக இந்தோனேஷியப் பத்திரிகையான ஸினார் ஹரப்பன் எழுதியுள்ளது.

ஒருகாலத்தில் கொக்கோ எண்ணெய், கொப்ரா ஆகியவற்றினைப் பெருமளவில் ஏற்றுமதி செய்து வந்த இந்தோனேஷியாவுக்கு இன்று அரிசி, கோதுமை மரக்கறி நெய் வேர்க்கடலை முதலானவற்றினை அதிகம் இறக்குமதி செய்யும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக மேற்படி பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது. (உ)

ஆசிரியருக்குக் கடிதம்:

## நினைவுச் சின்னம்

உலகின் பல தேசங்களிலும் சுதந்திரத்திற்காகவும், நாட்டு முன்னேற்றத்துக்காகவும் காலத்துக்குக்காலம் அரும்பெரும் தலைவர்கள் தோன்றியிருக்கின்றார்கள். இவர்கள் மக்கள் மனத்தில் நீங்கா இடத்தைப் பிடித்துக்கொண்டார்கள். இவர்களின் ஞாபகச்சின்னமாக பலவிதமான வேலைப்பாடுகள் நடந்துள்ளன இதேபோல் அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கும் ஒரு நினைவுச் சின்னம் அமைப்பதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இந்த நினைவுச் சின்னத்திற்கு மூன்றரை லட்ச ரூபா செலவிடப்படவுள்ளதாக 'ஈழநாடு' பத்திரிகைமூலம் அறிந்தேன்.

எத்தனையோ இளைஞர்களும், யுவதிகளும், மற்றும் பலரும் வேலைவாய்ப்பின்றி அல்லும் பகலும் கண்ணீருடன் வாழ்ந்துவரும் இந்நிலையிலிருக்கும் போது மூன்றரை லட்சம் ரூபாவைச் செலவு செய்து, அமரர் செல்வா நினைவாக இக்கட்டடத்தை எழுப்ப எண்ணுவது வரவேற்கக்கூடிய ஒரு செயலாகத் தெரியவில்லை.

இதனால் நான் அமரர் செல்வநாயகத்திற்கு ஞாபகச்சின்ன வேலையைச் செய்யவேண்டாமென்று கூற முன்வரவில்லை. அதற்குப் பதிலாக ஒரு சிக்கனமான முறையில் இக்கைங்கரியத்தைச் செய்யவேண்டுமென்பதேஎனது நல்லெண்ணமாகும்.

அத்துடன் நினைவுச் சின்னத்திற்குச் செலவிடும் பணத்தில் சில தொழிற்சாலைகளை நிறுவி அமரரின் நினைவாக எத்தனையோபேருக்கு "வேலை வாய்ப்புக்களை" வழங்கலாம் என்பது எனது உண்மையான உள்ளக்கருத்தாகும்.

அத்துடன் அமரரின் பெயரால் பரம ஏழைக் குடும்பத்தில் பிறந்து மிகப் புலமைத்தியம்பெற்ற மாணவ மாணவிகளுக்கு புலமைப்பரிசில் (Scholarship) வழங்கி வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கலாம். இதனால் இவர்கள் படித்துவந்து நாட்டுக்குச் சிறந்த சேவை செய்ய வாய்ப்பு ஏற்படும். இப்படி இன்னும் எத்தனையோ பிரயோசனமான வழியில் நாட்டுக்கு நல்ல பலன் தரக்கூடிய வழியில் பணத்தைச் செலவு செய்வது எல்லோராலும் வரவேற்கப்படும்.

மு. பரமநாதன்,
காரைநகர்

## 'ஒழுக்கத்தை வளர்ப்பதே கல்வி'

அரியாலை, ஞாயிறு

"பாடநூல்களை வரிக்குவரி படித்து மனனஞ்செய்து பட்டங்களைப்பெறுவது கல்வியாகாது. தமது அறிவைப்பெருக்கிக்கொள்ளும் வகையில் சிறந்தமுறையில நல்லாசிரியரிடம் கல்விபெற்று ஒழுக்க சீலர்களாக வாழ வழிசெய்வதே சிறந்த கல்வியாகும் மனதை ஒருவழிப்படுத்தி ஐயந்திரிபறக் கற்று - தனக்கும் மற்றவர்களுக்கும் பயனுள்ளதாக வாழ்வதே சிறந்த கல்வி கற்றதன பயனாகும்.

இவ்வாறு யாழ் - பரியோவான் கல்லூரி பீற்றர் மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்ற மாணவர் கூட்டத்தில் திரு க ஜீவநாயகம் பேசுகையில் குறிப்பிட்டார்

கல்லூரி அதிபர் திரு சி. ஈ. ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் "நல்லகுருவிடம் பணிவுடனும் பண்புடனும் பழகி நல்லமுறையில் கல்விகற்க முற்படும் ஒருவன்தான் சிறந்த கல்விமானாகத் திகழ்வான, கல்லூரிகள் சிறந்த பண்புள்ள ஒழுக்கமுள்ள மாணவர்களை உருவாக்கும் அறிவுக் கூடங்களாகத் திகழவேண்டும்" என்றார்.

பரி. யோவான் கல்லூரி சிறந்த பண்பும் ஒழுக்கமும் உள்ள கல்விமான்களை இந்நாட்டிற்கு தந்துள்ளது என்றும் அவர் சொன்னார். (அ)

## பிஸ்கால் விற்பனை

### மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்

1. சரவணமுத்து கந்தையாவும்,

2. பெண் நாகம்மா, இருவரும்,

பாலாவோடை அம்மன் கோவிலடி, காரைநகர் கிழக்கு, காரைநகர். — வழக்காளிகள்

வழக்கு இலக்கம்:
எம். எஸ். 5367

எதிராக

1. கணபதிப்பிள்ளை சுப்பிரமணியமும்,

2. பெண் சிவபாக்கியம், இருவரும்,

விளானை, காரைநகர் கிழக்கு காரைநகர்.

— எதிராளிகள்

மேற்சொல்லப்பட்ட எதிராளிகளிடமிருந்து ரூபா 1000க்கு 18-4-75 தொடக்கம் 28-11-75 வரையும் 12% வட்டியையும் அதன்பின்முழுத் தொகைக்கும் முழுவதும் கொடுக்கும் வரைக்கும் 5% வட்டியையும் அத்துடன் இவ்வழக்கின் செலவாக ரூபா 487-55 சதமும் 7-4-76ம் திகதித் தீர்வையின்படி 2-ம் வழக்காளி மேற்சொல்லப்பட்ட எதிராளிகளிடமிருந்து அறவாக்குவதற்காக கீழே விபரிக்கப்படும் ஆதனத்தை 1977-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 20-ம் திகதி வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு சொல்லப்பட்ட ஆதனத்தில் இருந்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது. அத்துடன் பிஸ்கால் செலவும் பவுண்டேச்சும் அறவாக்கப்படும்.

### ஆதன இடாப்பு

1. வடமாகாணம் யாழ்ப்பாணம், டிஸ்திறிக் தீவுப்பகுதி, காரைதீவு கோவில்பற்று, தங்கோடை களபூமி இறை 'மாவுதனை' நெற்பரப்பு 32, எல்லைகள்.

கிழக்கு: பரமநாதர் துரைரத்தினத்தின் ஆதனம்.

வடக்கு: கனகரத்தினம் பெண் சரஸ்வதிக்கும் சண்முகம் கந்தையாவுக்குமுரிய ஆதனங்கள்.

மேற்கு: சண்முகம் ஆறுமுகத்திற்கும் பங்காளருக்கும் நடராசா பெண் தெய்வானைக்குமுரிய ஆதனங்கள்.

தெற்கு: சண்முகம் பெண் சின்னச்சியின் ஆதனம். (பழைய உறுதிப்படி) இது யாழ்ப்பாண பதிவிலக்கப 335/176

2. மேற்படி காரைதீவு கிழக்கிறை "இலந்தைக் குளிவயல்" நிலப்பரப்பு 14. குளி 4. தெற்கெல்லைக் கிணற்றில் பங்கும். எல்லைகள்.

கிழக்கு: கந்தையா சுப்பிரமணியத்தின் ஆதனம்.

வடக்கு: சின்னத்தம்பி கந்தையாவின் மகனின் ஆதனம்.
மேற்கு: வாய்க்கால்.

தெற்கு: சுப்பிரமணியம் பெண் சிவபாக்கியத்தின் ஆதனம். இதனடங்கலும் பதிவு இலக்கம் சீ. 405/36.

**மு. பத்மநாதன்**
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.
20-09-77. 7214

## ஜே. ஆருக்காக விசேஷபூசை

பண்டத்தரிப்பு, ஞாயிறு

பிரதமர் திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனவின் பிறந்த தினத்தை யொட்டி கடந்த சனிக்கிழமையன்று காங்கேசன்துறைத் தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி மத்திய குழுவினர் சார்பில் அளவெட்டியிலுள்ள பெருமாள் கடவைப் பிள்ளையார் ஆலயத்தில் விசேஷ பூசை நடாத்தப்பட்டது. (அ)

## வரி விளம்பரம்

### தேவை

நன்கு காய்ந்த எலுமிச்சங்கோது தேவை. தொடர்பு கொள்ளவும். மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம். 7217

லேத் வேலை, பிற்றிங்வேலை தெரிந்தவர்கள் தேவை. நேரில் வரவும். ராதா மெசீன் கம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7167

### வகுப்புக்கள்

வகுப்புக்கள் 27-9-77-ல் தொடங்குகிறது. இலவசமாக எல்லா வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. தொடர்பு நிர்வாகி, மொடேர்ன் இன்ஸ்டிடியூட், கோப்பாய் சந்தி, கோப்பாய். 7195

### விற்பனைக்கு

மின்சாரத்தில் இயங்கும் அரிசி ஆலையும் அதன் உபகரணங்களும் விற்பனைக்குண்டு, விபரங்களுக்கு 36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 7207

சின்தெட்டிக் சாறி 59-40 சதத்துக்கும், சூட்டிங் யார் 1?-50 சதத்திற்கும் விற்பனைக்குண்டு ஆறுமுகம் ரெக்ஸ்ரைல்ஸ், இல: 20, கிருன் பஜார், யாழ்ப்பாணம். 7209

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் பிரபல்யமான இடத்தில் இரண்டு கடைகள் வாடகைக்குண்டு. விபரங்களுக்கு: விக்ரு கல்வி நிலையம், 52 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 7218

### CLASSES

Classes in Administrative Accounting, Book-keeping, Steneography: I.C.M.A. and English starts first October 1977 at Kankesanthurai and Dr. Subramaniam Road, Chunnakam. For details. Apply Director Eagles Institute Business Studies, Main St. Kankesanthurai. 7201

### தேவை

வேப்பம்விதை, ஆமணக்கம் விதை, இலுப்பை விதை, நிலக்கடலை, எள்ளு, இறப்பர் விதை, பருத்தி விதை தொகையாகவும் சில்லறையாகவும் திருப்தியான விலைக்குப் பெற்றுக்கொள்ளப்படும். விலை விபரத்துடன் உடனே தொடர்பு கொள்ளவும். பொ(B)பி இன்டஸ்றீஸ், ஆனைக்கோட்டை. 7222

## தையிட்டிக் குளம் புனரமைப்பு

மாவிட்டபுரம், ஞாயிறு

மழை நீரைத் தேக்கிவைத்து விவசாயத்திற்கு உபயோகிக்கும் திட்டத்திற்கமைய வலி-வடக்குப்பகுதியில் தையிட்டிக் குளம் சிரமதான முறையில் செப்பனிடப்படுகிறது.

தையிட்டி கலாவல்லி சனசமூக நிலையத்தினரும், அப்பகுதி மக்களும் சேர்ந்து மேற்கொண்டுள்ள மேற்படி குளத்தைச் செப்பனிடும் வேலையை வலி-வடக்கு கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. க. சிவரத்தினம் ஆரம்பித்துவைத்தார்.

# "சர்வதேசப் பிரச்னைகளுக்கு விரைவில் தீர்வுகாண்க"

## ரஷ்யா, அமெரிக்கா வலியுறுத்து

லண்டன், செப். 25

மத்திய கிழக்கு முதலான பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதில் பரஸ்பர விரைவு காணப்படவேண்டும் என்று சோவியத் யூனியனும், அமெரிக்காவும் கூறியுள்ளன. அமெரிக்க வெளி நாட்டமைச்சர் திரு. சைராஸ் வான்ஸூம், சோவியத் யூனியன் வெளிநாட்டமைச்சர் திரு. குரொமிக்கோவும் நடத்திய பேச்சு வார்த்தைகளையடுத்து வெளியிடப்பட்ட அறிக்கையில் மேற்கண்ட கருத்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

### மீண்டும்சந்திப்பர்

புதிய ஆயுதப் பரிகரணத் திட்டம் குறித்து திரு. வான்ஸ் எதிர்வரும் வெள்ளிக்கிழமை திரு. குரொமிக்கோவை சந்தித்து மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிருர்.

இச்சந்திப்பு நியுயோர்க்கில் இடம் பெறும்.

### மொங்கோலிய பத்திரிகையின் கருத்து

இது இவ்வாறு இருக்க, அமெரிக்க-சோவியத் யுத்த மொன்றினை மூள வைக்கவே சீன முயன்று வருகின்றது. சீன தற்போது பின்பற்றி வரும் வெளிநாட்டுக்கொள்கை சமாதான நலன்களுக்கு முற்றிலும் விரோதமானதாகவே உள்ளது என மொங்கேபலியப் பத்திரிகையான உனென் எழுதியுள்ளது.

"தற்போதைய சீனத் தலைமைப்பீடம் முன்னைய மாஓ ஆட்சியாளர் விட்ட சில தவறுகளை திருத்த முயலுகின்ற பொழுதிலும் தற்போதைய ஆட்சியாளரினது வெகுஜன விரோதக் கொள்கைகளும் முன்னைய ஆட்சியாளரின் கொள்கைகளுக்கு சாராம்சத்தில் வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. இராணுவ வாதத்தையும், குறுகிய தேசிய வாதத்தையும் பரப்புவதில் சீன ஆட்சியாளர் இப்போதும் ஈடுபட்டுள்ளனர்", என உனென் மேலும் எழுதியுள்ளது. (உ)

# "மது விலக்கு ரத்து என்ற பேச்சுக்கே இடமில்லை"

## தமிழக நிதிஅமைச்சர் அறிவிப்பு

சென்னை, செப். 25

"தமிழ்நாட்டில் மதுவிலக்கை ரத்துச்செய்வது என்ற பேச்சுக்கே இடமில்லை" என்று தமிழ்நாடு நிதியமைச்சர் திரு. நாஞ்சில் மனேகரன் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"மதுவிலக்கை ரத்துச்செய்யாமலே ஹோட்டல் துறையையும், சுற்றுலாத் துறையையும் வளர்க்க முடியும். மதுவிலக்கை ரத்துச்செய்துதான் இத்துறைகளை அபிவிருத்தி செய்யவேண்டும் என்றால் அந்த அபிவிருத்தி வேண்டாம்.

தமிழ்நாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளைக் கவர்வதற்கு மதுபானம் ஒன்றும் அவசியமானதல்ல. அவர்கள் தமிழ் நாட்டின் புராதன கலைச்செல்வங்களைத் தரிசிக்கவே இங்கு வருகிறார்கள்." (உ)

# இஸ்ரேலின் மனிதஉரிமை மீறல்போக்கு: குழு அனுப்பக் கோரிக்கை

லண்டன், செப். 25

இஸ்ரேல் கைப்பற்றிய அரபுப் பிரதேசங்களில் மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பாக குழு ஒன்றினை அனுப்பி வைக்கவேண்டும் என சர்வதேச பாராளுமன்ற சமாஜத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சிரியா, எகிப்து, லெபனன் ஆகிய நாடுகள் இக்கோரிக்கையை சமர்ப்பித்துள்ளன.

இஸ்ரேலின் போக்குக்கு இந் நாடுகள் இக்கோரிக்கை அடங்கிய மகஜரில் கண்டனம் தெரிவித்துள்ளன.

ம. கி. பிரச்னை தொடர்பான ஜெனிவா மாநாடு விரைவில் கூட்டப்படவேண்டும் என்றும் இம்மாநாட்டில் பலஸ்தீன விடுதலை இயக்கம் உட்பட சகல கட்சிகளுக்கும் இடமளிக்கப்படவேண்டும்என்றும் மேற்படி நாடுகள் சர்வதேச பாராளுமன்ற சமாஜத்திடம் கேட்டுக்கொண்டுள்ளன. (உ)

# ம. கி. நாடுகளில் வாந்திபேதி நோய்

## 72 பேர் பலி

லண்டன், செப். 25

மத்திய கிழக்கில் உள்ள ஏழு நாடுகளில் பயங்கரமாக வாந்திபேதி நோய் பரவி வருகிறது.

இந்நோயினால் 72 பேர் இதுவரை இறந்துள்ளனர் என்றும் 2500 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

1948-ம் ஆண்டுக்குப்பின் பின் இவ்விதப் பயங்கர வாந்திபேதி நோய் இப்போது தான் இந்நாடுகளில் ஏற்பட்டுள்ளது.

அரபு நாடுகளின் சுகாதார சேவை நிறுவனங்கள் இந் நோய்பரவும் ஆபத்தைத் தடுக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. (உ)

# இந்திய ஜனதிபதி நாடு திரும்பினர்

புதுடில்லி, செப். 25

பாரத ஜனதிபதி திரு நீலம் சஞ்சீவரெட்டி தமது சுவாசப் பையில் ஏற்பட்ட கோளாறுக்கான சிகிச்சைகளை முடித்துக் கொண்டு நியூயோர்க்கில் இருந்து நேற்றிரவு விமானமூலம் புதுடில்லி வந்துசேர்ந்தார்.

திரு. சஞ்சீவ ரெட்டியை பதில் ஜனதிபதி திரு. ஜட்டி மத்திய அமைச்சர்கள் திருவாளர்கள்; ஜெகஜீவன்ராம், ராஜ்நாராயண், ஜோர்ஜ் பெர்னண்டஸ், சரண்சிங் உட்பட பலர் புதுடில்லி விமானநிலையத்தில் வரவேற்றனர் பிரதமர் திரு மொரார்ஜிதேசாய் தற்போது கேரள விஜயத்தினை மேற்கொண்டுள்ளமையால் அவரது செயலாளர் ஜனதிபதியை வரவேற்க விமான நிலையம் வந்திருந்தார்.

ஜனதிபதி பூரணசுகம் பெற்றுவிட்டதாகவும் அவர் தமது உத்தியோகபூர்வ அலுவல்களை உடனடியாக ஆரம்பிப்பார் என்றும் தெரிவிக்கப் பட்டது. (உ)

# "காலத்தால் அழியாத இலக்கியம் படைத்தவர் சரத்சந்திரர்"

## நூற்றுண்டு விழாவில் 'தீபம்' ஆசிரியர் புகழ்மாலை

சென்னை, செப். 25

"காலத்தால் அழியாத நாவல்களைப் படைத்த பெருமைக்கு உரியவர் வங்க எழுத்தாளர் திரு. சரத்சந்திர சட்டர்ஜி" என்று தமிழ் நாட்டின் பிரபல நாவலாசிரியரும் "தீபம்" ஆசிரியருமான திரு. நா. பார்த்தசாரதி (மணிவண்ணன்) கூறினர்.

வங்க எழுத்தாளர் திரு. சரத் சந்திர சட்டர்ஜியின் நூற்றுண்டு விழா சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றபோது பேசுகையிலேயே திரு. பார்த்தசாரதி இப்பாராட்டை வழங்கினர்.

திரு. சட்டர்ஜியின் உருவப் படத்தை மத்திய கல்வி அமைச்சர் டாக்டர் பிரதாப் சந்தர் திறந்துவைத்தார்.

"திரு. சட்டர்ஜி இந்திய கலாச்சார மணம் பரப்பியவர்" என்று டாக்டர் சந்தர் தமது உரையில் குறிப்பிட்டார்.

### சுதந்திர போராட்ட வீரரும்கூட

"சுதந்திரப் போராட்ட காலத்தில் அவர் இந்திய தேசியகாங்கிரஸில் இணைந்து ஆற்றிய சேவை அளப்பரியது" என்று அமைச்சர் தமது உரையில் மேலும் சொன்னர்.

தமிழ்நாடு மாநில தகவல் ஒலியரப்புத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பனும் இவ்விழாவில் கலந்துகொண்டார். (உ)

# "மந்திரியாகும் ஆசையில் தான் நாவலர் எம். ஜி. ஆருடன் சேர்ந்தார்"

## கலைஞர் கருணநிதி குற்றச்சாட்டு

சென்னை, செப். 25

"நாங்கள் எம். ஏ, பீ. ஏ. படித்தவர்கள் பதவிகளை விரும்பியிருந்தால் காமராஜரிடம் போயிக்கமாட்டோமா? பதவியை விரும்பாததால்தான் பெரியாரிடம்போனேம்" என்று அன்று நாவலர் பேசியது கிடையாதா? அதேநாவலர் இன்றைக்கு அ.இ.அ.தி.மு.க. அரசிடம போயிருப்பது எதற்காக?" என அரங்கோணம் நகரில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணநிதி கேட்டார்.

"நாடாளுமன்றத்தேர்தலில் கழகம் ஒரே ஒரு இடத்தைத் தான் பெற்றது. அந்தத்தேர்தலுக்குப்பின்னர் தி.மு.க. இருக்காது- ஒன்றரை ஆண்டு அவதூறுப் பிரசாரத்தால் டெலிவிஷன் காட்டிய படங்களின் பிரகாசரத்தால் பத்திரிகைகளின் பிரசாத்தால் கழகம் நாசமாகிவிட்டது. அடுத்த தேர்தலில் கழகம் இருக்காது என்று கணக்குப் போட்டார்கள் மாற்றர்.

மாற்றர் மட்டுமல்ல மாற்றுக்குறையாத தங்கங்கள் என்று யாரை எண்ணியிருந்தோமா அவர்கள் எல்லாம் கூட அந்தத் தப்புக் கணக்கைப் போட்டார்கள்.

இனிமேல் இங்கு இருந்தால் வாழ்க்கை கிடைக்காது. கழகத்திற்கே வாழ்வில்லை. கழகத்திற்கு வாழ்வில்லை என்றல் தமக்கு எங்கே வாழ்வு என்று கழகத்தை பற்றி கவலைப்படாமல் தங்கள் வாழ்க்கையைப்பற்றிக் கவலைப்பட்டவர்கள் இங்கிருந்து வெளியேறினர்கள். எதிர்முகாமில் போய்ப்பேசினர்கள். தங்கள் கட்சிக்கு ஒரு பெயரை வைத்துக் கொண்டனர்.

### அன்றே சொன்னேம்

தொடங்கும்போதே இது எங்கேயோ போய் இணைவதற்காக தொடங்கப்பட்ட கட்சியே தவிர இயங்குவதற்காக தொடங்கப்பட்ட கட்சியல்ல என்றேம்.

அப்போது அவர்கள் நாங்கள் தனித்தே நிற்போம். என்றர்கள். தனித்தே தான் நிற்கிறர்கள். யாரும் அணுகவில்லை. யாரும் அணுகாத காரணத்தினல் நாங்கள் இணைந்து நிற்போம் என்று இணையப்போய் விட்டார்கள்.

இணையப் போனவர்கள் என்னகாரணம் கூறினர்கள். கருணநிதியின் சர்வாதிகாரத்தைப்பொறுத்து கொள்ளமுடியவில்லை. தாங்கள் ஜனநாயத்தின் சிற்பி. ஜனநாயத்தினை ஒப்பற்றவழிகாட்டி என்றர்கள். ஐந்தாண்டு காலமாக ஒருகட்சி நிறுவி தேர்தல் நடத்தாமல் தந்தி கொடுத்து வரவழைக்கிற பொதுக்குழு உறுப்பினர்கள். அப்படிப் பட்ட ஒரு ஜனநாயக புருஷரிடம் சர்வாதிகாரம் சிஞ்சிற்றும் கிடையாது. அந்த ஜனநாயக சீலர்தான் எம். ஜி. ஆர் அவரிடம் சென்று அவரது நிழலில் நிற்போம். ம. தி. மு. க செயலாவராக இந்த மேடையில் ஏறினேன். அ. தி. மு. க. வின் சாதாரண உறுப்பினராக இறங்கப்போகிறேன் என்று அருமை நாவலர் சொன்னர். அவர் எப்படி இறங்கிப்போனலும்கூட நாளைக்கு மந்திரிகளாக வந்து உட்காரலாம் என்ற எண்ணத்தோடு இருப்பவர்கள் என்பது நமக்குத் தெரியும்.

# "மொழிகள் அரசியலுக்கு அப்பாற்பட்டவை"

## தமிழக ஆளுநர் உரை

சென்னை, செப். 25

"மொழிகள் அரசியலுக்கு அப்பாற்பட்டவை" என்று தமிழ்நாடு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி கூறினர்

சென்னையில் ஹிந்தி பிரசார சபாவின் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் ஆளுநர் மேலும் கூறியதாவது:

"மொழிகளில் சமத்துவ நிலை அங்கீகரிக்கப்படவேண்டும். மொழித்திணிப்பு இருக்கக்கூடாது. ஆனல் ஒருவர் தாம் விரும்பும் மொழியைக் கற்பதற்கு அனுமதியளிக்க வேண்டும்." (உ)

# "வரதட்சனை, ஜாதிப்பூசலை நீக்க சட்டத்தை வலுவாக்குங்கள்"

## பிரதமர் தேசாய்க்கு வேண்டுகோள்

சென்னை, செப். 25

"வரதட்சனை, ஜாதி வேறுபாடு, விபச்சாரம் என்பவற்றை முற்ருக ஒழித்துக்கட்ட சட்டம் வலுவாக்கப்படவேண்டும்" என்று பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயை இந்திய இளைஞர் காங்கிரஸ் கேட்டுக்கொண்டுள்ளது.

தமிழ்நாட்டுக்கு வார இறுதியில் பிரதமர் விஜயம்செய்திருந்தபோது இக்கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இக்கோரிக்கையைச் சமர்ப்பித்த இளைஞர் காங்கிரஸ் தலைவர் டாக்டர் புருஷோத்தமன் "ஜாதிப்பெயர்கள் ஊர்களுக்கு இடப்பட்டிருப்பது நீக்கப் படவேண்டும்" என்றும் கேட்டுக்கொண்டார். (உ)

# நடவடிக்கை

லண்டன், செப் 25

எகிப்துக்கு நிலக்கரி ஏற்றுமதி செய்வதை நிறுத்த சோவியத் யூனியன் நடவடிக்கை எடுத்துள்ளது (உ)

# மாஸ்கோ பயணம்

கொழும்பு. ஞாபிறு

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்க மருத்துவ சிகிச்சை பெறும் பொருட்டு மாஸ்கோ பயணமாகியுள்ளார். (உ)

பதவி, பவிசு, ஆடம்பரம் அந்தஸ்து இவைகளுக்காக ஒரு இயக்கத்திலே இருந்தோமென்றல் அதைவிட வெட்கக்கேடு வேறொன்றுமில்லை என்றர். )கெ)

## அகதிகள்முகாமில் சிலமணி நேரம் (4)

# அகதிகள்யாவரும்விவசாயம் செய்யவே விரும்புகிறார்கள்

கிளிநொச்சி முகாமிலுள்ள அகதிகள், தங்களுக்கேற்பட்ட பயங்கர அனுபவங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டனர். ஒருவர் சம்பவத்தைச் சொல்ல, பலர் அவருக்குமுன்னால் திண்டுநின்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். இடையிலே சிலர், ஏன் அப்படிச் செய்யவில்லை? ஏன் இப்படிச் செய்யவில்லை? என்று குறுக்கீடு செய்து கொண்டிருந்தார்கள்.

மண்டபம் ஒன்றில்வயதான ஒருவர் தமது அனுபவத்தை விளக்கிக் கொண்டிருந்தார். அவ்வழியால் சென்ற எனக்கு 'ஐந்து சடலங்களையும் நன்றாகப் புதைத்தோம் என்ற சொற்கள் காதில் விழுந்தது. அப்பால் என் கால்கள் நகர மறுத்துவிட்டன. திரும்பிப் பார்த்தேன். அவர்தொடர்ந்து விபரித்துக் கொண்டிருந்தார்.

அருகில்போய், கூட்டத்தோடு கூட்டமாகநின்றுஅவர் கூறுவதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். எனக்கு நல்லதொரு பேட்டி கிடைத்துவிட்டது நான் யார் என்பதைக் கூறிவிட்டு, 'என்ன நடந்தது' எனக் கேட்டேன்.

திரும்பவும் அவர் அந்தக் 'கண்ணீர்க் கதையை' முதலிலிருந்து ஆரம்பித்தார். அவருடனிருந்த உறவினர்கள் சிலரும், இடையிடையே அவருக்கு உதவியளித்துக்கொண்டிருந்தார்கள்.

அவர் இம்பங்கட்டுவ என்ற இடத்திலிருந்து வந்திருந்தார். பெயர் ஆர். சின்னராசா.

17-ம் தேதி அங்கு கலவரம் ஆரம்பித்ததாக அவர்கதையை ஆரம்பித்தார்.

'வயலில் தண்ணீர் பாய்ச்சும் வேலையில் ஈடுபட்டிருந்தோம். மாலை ஐந்தரை மணிக்கு குழப்பம் ஆரம்பித்து விட்டதாகச் செய்தி கிடைத்ததாகக் கூறினார்.

### 150 பேர் வந்தனர்

'என்ன செய்தீர்கள்?' என்றேன் 'மகாவலித் திட்ட லொறிகளில் சுமார் 150 பேர் வந்தார்கள். 60 வீடுகள் தீயில் எரிந்து சாம்பராகியது' என்றார்.

வீட்டிலிருந்த பெண்கள் குழந்தைகள் நாலாபக்கமும் சிதறி ஓடினார்கள். வந்தவர்களிடம் ஆயுதங்களும் இருந்தன கையில்கிடைத்த சாமான்களை எடுத்துக்கொண்டு காட்டை நோக்கி ஓடினோம்' என்றார்.

'காட்டில் என்ன நடந்தது?'

'நாங்கள்நடுக்காட்டில் இருந்தபோது காட்டை நோக்கிச் சுட்டார்கள் நாங்கள் ஆடாமல் அசையாமல் இருந்தோம். காட்டைச் சுற்றித் தீவைத்தார்கள். தீயின் கொடுமையைத் தாங்கினோம் தீ எங்களை நோக்கி வந்துகொண்டிருந்தது வேறு வழியின்றி வெளியேறினோம்' என்றார்.

'வெளியேறி எங்கு போனீர்கள்?' என்று கேட்டேன்.

'வாங்க பாதுகாப்புத் தருகிறேன் என ஒருவர் வந்து அழைத்தார். நாங்கள்அவரை நம்பிப் பின்னால் சென்றோம் ஒற்றையடிப்பாதை வழியாகச் சென்றோம்' என்றார்.

### துடிதுடித்து விழுந்தனர்

அதன் பின்?-

முன்னுக்கு வந்தவர் சுந்தரராஜபிள்ளையின் இடதுகையில் வெட்டினார். கூடவந்த சுப்பையாவையும் தாக்கினார்கள். இருவரும் அதே இடத்தில் துடிதுடித்து விழுந்தார்கள். நானும் பூபாலனும் அதன்பின்னால் வந்தோம். எனக்கு குத்துவதற்கு ஓங்கினார்கள். அது பூபாலன் கழுத்தில் விழுந்தது. அவரும் கதறிக்கொண்டு விழுந்தார். அம்மா, தங்கச்சி மற்றும் எல்லாரும் கலைந்து ஓடினோம்.'

'எங்கு ஓடினீர்கள்?' – என்றேன். 'கால்போன போக்கில் ஓடினோம். அவர்கள், அம்மா தங்கச்சியையும் மற்றவர்களையும் ஆற்றில் மறித்துத் தாக்கினார்கள்.'

### காட்டில் தங்கினோம்

'பின் எங்கு சென்றீர்கள்?'– என்று கேட்டேன்.

'காட்டில் தங்கியிருந்தோம். 19ந் திகதி சில சிங்களவர்கள் எங்களை பொலிஸ் ஜீப்பில் அனுப்பிவைத்தார்கள். பின் பொலிசாருடன் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று சடலங்களைக்காண்பித்தோம்'.

'நீங்கள் தான் அடக்கம் செய்தீர்களா? என்று கேட்டேன்.

'ஆம்'. விசாரணையின் பின் நாங்கள் தான் அடக்கஞ்செய்தோம். தம்புள்ளை ஆஸ்பத்திரியிலும் 2 சடலங்கள் இருந்தது. தம்புள்ளையில் 5 சடலங்களையும் அடக்கஞ்செய்தோம்.''

### நள்ளிரவு வீடு தீப்பற்றியது

மாத்தளை பலாபத்து தோட்டத்தைச் சேர்ந்தவர் எஸ். ஞானப்பிரகாசம். இவர் ஒரு விவசாயி. இவருக்கு 4 பிள்ளைகள். 'என்ன நடந்தது?' என்று கேட்டேன்.

''19ந் தேதி இரவு வீட்டுக்குள் படுத்திருந்தோம். நள்ளிரவு வீடு தீப்பற்றி எரிந்தது. சிங்கள ஆட்கள் வந்து காப்பாற்றினார்கள். பொலிஸில் போய் முறைப்பாடு செய்தோம். எவ்வித பிரயோசனமுமில்லை' என்றார்.

''பொய் முறைப்பாடு, என்று சொல்லி அக்கறை எடுக்காமல் தட்டிக்கழித்துவிட்டார்கள் என்று சொன்னார்.

''ரத்தோட்டையில் உறவினர்கள் இருக்கிறார்கள் அவர்கள் பற்றித் தகவல் இல்லை. என்ன நடந்ததோ தெரியாது'' எனக் கவலைப்பட்டார்.

### இந்தியாவில் உறவினர் இல்லை

குருநாகலைச் சேர்ந்தவர் சின்னக்கண்ணு. அவர் மனைவி செல்லம்மா, பிள்ளைகளுடன் அகதியாக இருந்தார்.

''18ந் தேதி கலவரம் ஆரம்பித்ததாகவும், வீட்டில் தடியால் அடித்துச் சின்னையா என்பவர் படுகாயமடைந்ததாகவும், தாங்கள் தப்பி ஓடிவந்ததாகவும் கூறினார்.

''தாங்கள் றப்பர்த் தோட்டத்தில் பால் எடுத்துவந்ததாகவும் கூறினார்.

''தங்களுக்குப் பிரஜாவுரிமை இல்லையென்றும், இந்தியாவில் சொந்தக்காரர் ஒருவரும் இல்லையென்றும் யாழ்ப்பாணத்தில் இருக்க விரும்புவதாகவும் கூறினார்கள்.

### இன்ஸ்பெக்டருக்குப் பாராட்டு

கல்கமுவாவில் இருந்துவந்த சில அகதிகள் கல்கமுவா இன்ஸ்பெக்டரைப் பாராட்டினார்கள். அவர் பொலிஸ்நிலையத்தில் சுமார் 350 அகதிகளைப் பாதுகாத்தாரென்றும், இதை எதிர்த்து ஒரு கோஷ்டியினர் பொலிஸ்நிலையம் வந்தபோது கண்ணீர்ப்புகை அடித்து விரட்டினாரென்றும் அவர்கள் கூறினார்கள்.

**கா. யோகநாதன்**

### கடைகள் உடைக்கப்பட்டன

அவர் கல்கமுவாவில் இருந்த சமயம் எதுவும் நடக்கவில்லையென்றும், அவசர அலுவலாக அவர் மிக்கலாவா சென்ற சமயமே, தமிழர் கடைகள் உடைக்கப்பட்டதாகவும் கூறினார்கள்.

மாத்தளை முத்துமாரி அம்மன் கோவிலில் அகதிகளாக இருந்த சிலர் இந்த முகாமுக்கு அகதிகளாக வந்திருந்தார்கள். இவர்கள் தம்புள்ளையைச் சேர்ந்தவர்கள்.

'இங்கு எப்படி வந்தீர்கள்?' என்று கேட்டேன்'

''மாத்தளைக் கோவிலில் இருக்கும்போது, நிலைமை சீராகிவிட்டதாகவும், சொந்த இடத்திற்குப் போகும்படி கூறினார்கள். விதானையாரிடமும் நடந்தவற்றைச் சொல்லி அவர் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னோம்.''

'பின் என்ன நடந்தது?' என்று கேட்டேன்.

### இந்தியா அல்லது யாழ்ப்பாணம்

இந்தியாவுக்கு அனுப்புங்கள் அல்லது யாழ்ப்பாணத்திற்கு அனுப்புங்கள் என்று 19 பேர் பிடிவாதமாக இருந்தோம்'' என்றார்கள்.

'அவர்கள் என்ன செய்தார்கள்' என்று கேட்டேன்.

''இராணுவப் படையினர் வந்து போகும்படி கேட்டார்கள். சுட்டுக் கொன்றாலும் போகமாட்டோம்'' என்றோம்.

'பின்னர்?'

### பக்தர்கள் உதவி

'மாத்தளை முத்துமாரி அம்மன் பக்தர்கள் உதவியளித்து 6ந் தேதி எங்களை இங்கு அனுப்பினார்கள். 27 பேர் ஒரு குடும்பமாக இங்கு வந்தோம் ஒரு குடும்பம் இந்தியா போவதற்கு மாத்தளையில் தங்கிவிட்டது என்றார்கள். தங்களுக்கு இந்தியாவில் உறவினர்கள் இல்லை'' என்றும் கூறினார்கள்.

முகாம்களில் அகதிகள் எதிர்பார்ப்பது விவசாயம் செய்யக் காணிதான். இதனை எதிர்பார்த்துத்தான் அவர்கள் வடபகுதிக்கு வந்துள்ளார்கள் என்பதை அவர்களுடன் கலந்துரையாடியபோது அறிந்துகொண்டேன்.

கொழும்புத்துறை அகதிகள் முகாமை சேர்ந்த செல்வாராசா என்பவரை சந்தித்தேன். இவர் தம்புள்ளையை சேர்ந்தவர். நான்குபிள்ளைகளுக்குத் தகப்பன்.

என்ன நடந்தது? என்று கேட்டேன்.

சிகரட் புகையிலை பயிர் செய்து வந்தேன் ரணசிங்கா என்ற முதலாளியின் கீழ் சம்பளத்திற்கு வேலை செய்து வந்தேன்.

19ம் தேதி கலவரம் ஆரம்பமானது என்றார்.

நீங்கள் என்ன செய்தீர்கள்? என்று கேட்டேன்.

'உங்களுக்கு கரைச்சல் வராது பயமில்லாமல் இருங்கள் நாங்கள் காப்பாற்றுவோம்' என முதலாளி உறுதியளித்தார். ஆனால் எங்கள் வீடும் எரிந்து விட்டது'- என்றார் அதன்பின் என்ன செய்தீர்கள்.?

### வீட்டிற்கு தீ வைத்தார்கள்

நாங்கள் வேலைக்கு சென்ற போதுதான் எங்கள் வீட்டிற்கு நெருப்புவைத்தார்கள்' என்றார்.

'தீ வைக்கப்பட்டபின்தாங்கள் காட்டுக்குள் சென்றுவிட்டதாகவும் அவர் கூறினார்.

பின் எப்படி முகாமிற்கு வந்தீர்கள்? என்று கேட்டேன்.

அவர் பதில் சொல்லு முன் அவருக்கு அருகில் நின்ற அவரது மனைவி அம்பிகாபதி இராணுவத்தினர் தங்களைமாத்தளை முத்துமாரி அம்மன் கோவில் முகாமிற்கு கூட்டிச் சென்றதாகக் கூறினார்.

முகாமில் எத்தனை நாட்கள் தங்கினீர்கள்?- என்றேன்,

### 20 நாட்கள் முகாமில்

20 நாட்கள் முகாமில் தங்கியதாகக் கூறினார்கள். அதன் பின் என்ன செய்தீர்கள்? நாங்கள் திரும்பவும் ஊருக்குப் போகவில்லை. நேராக வவுனியாவுக்கு வந்தோம். கோவில் பக்தர்கள் செலவுக்கு உதவி செய்தார்கள் என்றார்.

வவுனியாவில் என்ன நடந்தது? வவுனியா எம். பியை சந்தித்தோம் அவர் வவுனியா முகாமில் போதிய அகதிகள் இருப்பதாகக் கூறி எங்களை கிளிநொச்சிக்கு அனுப்பி வைத்தார். ரயிலுக்கான ஏற்பாட்டையும் அவர்தான் செய்து தந்தார். என்றார்கள்.

'கிளிநொச்சியில் என்ன நடந்தது?'

கிளிநொச்சி முகாம்களில் எங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. முகாம்களில், இனி மேல் அகதிகளை ஏற்கக் கூடாதென மேலிடம் தடை விதித்திருப்பதாக அறிந்தோம். பின் கிளிநொச்சி எம். பி யின் கந்தோருக்கு போனோம். அங்கு நூற்றுக்கு மேற்பட்ட அகதிகள் இருந்தார்கள். கடைத்தெருவில் உள்ளவர்கள் உதவி செய்தார்கள் அவர்களின் உதவியால் யாழ்ப்பாணம் வந்தோம்' என்றார்.

'யாழ்ப்பாணத்தில் எங்கு போனீர்கள்? என்று கேட்டேன்.

### கூட்டணிக் கந்தோரில்

'யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் நின்றவர்கள் காலை உணவு வழங்கினார்கள். யாழ்ப்பாண எம். பி வீட்டிற்குப் போனோம் அங்கு அவர் இல்லை. அங்குள்ளவர்கள் எங்களை கூட்டணிக் கந்தோருக்கு அனுப்பி வைத்தார்கள்' என்றார்.

கூட்டணிக் கந்தோரிலும் தங்கினீர்களா? என்று கேட்டேன்.

'இரு நாட்கள் தங்கினோம். உணவு தந்து உபசரித்தார்கள் பின் முகாமிற்கு அனுப்பி வைத்தார்கள்' என்றார்.

தனியார் தோட்டங்களில் கூலி வேலை செய்யவும் விருப்பம் என்று கூறினார்.

இதே முகாமைச்சேர்ந்த சுப்பையா என்ற அகதியையும் சந்தித்தேன். இவர் மாத்தளையைச் சேர்ந்தவர். மனைவியுடனும் ஒரு பிள்ளையுடனும் வந்திருந்தார்.

### 50 தமிழ்க்குடும்பங்கள்

18ம் தேதி கலவரம் ஆரம்பித்ததும் வீடுகள் எல்லாம் எரிந்துவிட்டது. அங்கு 50 தமிழ்க் குடும்பங்கள் இருந்தன. எல்லாரும் அகதிகளானோம் என்றார்.

பின் எங்கு சென்றீர்கள்?

மாத்தளை கோவில் முகாமிற்கு சென்றோம். அங்கு 3000 அகதிகள் இருந்தனர். 'என்ன தொழில் செய்தீர்கள்?'

7 ஏக்கர் நிலத்தில் வயல் செய்தோம். வருமானம் எடுக்கவில்லை என்றார்.

முகாமில் எத்தனை நாட்கள் இருந்தீர்கள்?

15 நாட்கள் இருந்தோம், பின் வெளியேறினோம் என்றார்.

உங்களுக்கு 350 ரூபா முகாமில் தந்தார்களா? என்று கேட்டேன்.

இல்லை, ஒரு சதமும் தரவில்லை சொந்த இடத்திற்குப்போகும்படி கூறி அனுப்பினார்கள் என்றார்.

'அங்கு போனீர்களா?'

போனோம், அங்கு வரவேண்டாம் ஆபத்து என்று அயலவர்கள் ஆலோசனை கூறினார்கள். நாங்கள்திரும்பி விட்டோம்'என்றார்.

''பின் எங்கு சென்றீர்கள்?''

''வவனியாவிற்கு வந்து, அங்கிருந்து கிளிநொச்சிவந்து பின் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தோம். யாழ்ப்பாணத்தில்தான் எங்களுக்கு ஒரு இடம் கிடைத்தது'' என்றார்.

முகாம்களிலும், வெளியில் உள்ள அகதிகளும் சரி, விவசாயம் செய்து வாழவே விரும்புகிறார்கள் என்பதை அவர்களுடன் கலந்துரையாடியபோது அறிந்துகொண்டேன். (முற்றும்)

---

## கருணாகரன் புகழ்மாலை

தூயமறை முடிபுணரா ஞானத்தின் திருவுருவே
  தூமறைகள் போற்றுகின்ற எங்களுயர் மணியே
ஆயகலை பலவுக்கும் மேலான அருமணியே
  ஆமயத்துள் ஒளிருகின்ற அற்புதனே ஐங்கரனே
மேய இருள் தனைப்போக்கும் மிகுஞான நல்விளக்கே
  மேதினியோர் போற்றுகின்ற மிகுசைவ முதற்பொருளே
ஆயபுகழ் உரும்பைதனில் அமர்கருணா கரக்கன்றே
  அடியேங்கள் போற்றுகிறோம் அவனியெலாம் வாழியவே.

— பண்டிதர் நீ. சி. முருகேசு.

ஞானம்வரும் செல்வம்வரும் பண்புவரும்
  எழில் பெருகும் நண்பர் சேர்வர்
தானம்வரும் தவம்வளரும் மிடியின்றி எந்நாளும்
  தழைக்கும் வாழ்வு
வானவரும் மண்ணவரும் பணிகருணா கரப்பிள்ளை
  யாரை வாழ்த்தும்
மானவருக் கெய்தாத பயனில்லை இதைநினைந்து
  வாழ்த்தி நெஞ்சே.

— வாகீச கலாநிதி கி. வா. ஜெகந்நாதன்.

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா இன்று திங்கள் பிற்பகல் நடைபெறுகிறது.

---




### 26—9—77 திங்கள்

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

6-05 சைவநற்சிந்தனை வி. வி நாராயணசாஸ்திரிகள், 6-10 கத்தோலிக்க நற்சிந்தனை சங். பிதா டீ சாமிநாதன், 6-50 இசைக்கோவை, 7-35 பாட்டு, 8-05 இருவயலின்.

மாலை 6-20 விளையாட்டுத் துறைச் செய்திகள், 6-30 புல்லாங்குழல், 7-02 கிராம சஞ்சிகை இரா. பத்மநாதன் 7-35 மெல்லிசைப்பாடல், 7-45 கண்டதும் கேட்டதும் செய்திச்சுருள், 8-05 பேச்சு, 8-15 இஸ்லாமிய கீதம், 8-40 முஸ்லிம் செய்திச்சரம், 9-30 பேச்சு ஈழத்துத் தனிப்பாடல்கள் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, 9-45 நாகசுரம் டி. எஸ். சுப்பிரமணியம், 10-30 உங்கள்விருப்பம் திரைப் பாடல்கள். (கெ)

# சுன்னுகத்தில் திருட்டுகளை ஒழிக்க தொண்டர் சபைகள்

## பொலிஸ் அதிகாரி ஏற்பாடு

யாழ்ப்பாணம், திங்கள்

சுன்னுகம் பொலிஸ் பகுதியில் அதிகரித்து வரும் திருட்டுச் சம்பவங்களை ஒழித்துக் கட்டும் வகையில் கிராமங்கள் தோறும் தொண்டர் சபைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதற்கான நடவடிக்கைகளை சுன்னுகம் நிலையப் பொறுப்பதிகாரி ஜனுப் இ. ஏ.ஏ. காதர் மேற்கொண்டுள்ளார்.

சுன்னுகத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை தொண்டர்சபையை ஜனுப் காதர் அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்.

இவ்விடயத்தில் கிராமசேவகர்களின் ஒத்துழைப்பும் பெறப்படும் என்று ஜனுப் காதர் தெரிவித்தார் (உ)


நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6 45 10-00
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
பூம்புகார்

சாந்தி தினசரி 10-30, 2-30, 6-30 காட்சிகள்
யாழ். நகர் ஃ முத்துராமன் ஃ ராஜம்மா
போன் 7642 ஃ நாகேஷ் ஃ எம்.ஆர்.ராதா
ஃ கல்யாணகுமார் ஃ உதயகுமார் நடித்த
தாயின் கருணை

Regal (Jaffna)
Daily at 10-30 a.m., 4-45 & 7-00 p. m.
One Man, one Woman a Blitzkrieg of Emotion, Between them a Flame is Kindled that Spendidly Ignites a Passion, Way beyond the limits of their imagination.
BRIEF ENCOUNTER Now a Major Film!
Starring
Sophia Loren — Richard Burton in
BRIEF ENCOUNTER (Color)

தினசரி 10-30, 2-30, 6-00
வின்ஸர் சிவாஜி, மஞ்சுளா, தேவிகா,
(யாழ்ப்பாணம்) கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

RIO (Jaffna)
2nd WEEK
LAST FEW DAYS DON'T MISS IT
Daily 10-30, 4-45, 7-00 p. m. only
Robert Shaw - Robert Ryan in
CUSTER OF THE WEST

வெலிங்டன் (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30 மாலை 6-00
விஜயகுமார் - ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

லிடோ போன்; 7693 கடைசி வாரம்
(யாழ் நகர் தினசரி 10-30, 2-30, 6-00
ஜெய்சங்கர்—சுஜாதா
நீ ஒரு மகாராணி

தினசரி 10-30, 2-30, 6-00
ராஜா போன்: 7180
(யாழ்நகர்) ஜெய்சங்கர் - ராஜஸ்ரீ-நாகேஷ் நடித்த
பூவா தலையா [புதியபிரதி]

மனோஹரா தினசரி 10-30 2-30 6-00
(யாழ்ப்பாணம்) எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
அறிமுகம் பவானி
நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

இன்று போயா தினத்தை முன்னிட்டு
படக்காட்சிகள் இல்லை


## இலவச பண்ணிசை வகுப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லை ஞானசம்பந்தர் ஆதினப் பன்னிரு திருமுறைப் பண்ணிசை மாமன்றம் நான்கு ஆண்டுத் திட்டத்தில் நடாத்தி வரும் பண்ணிசை மாமணிப் பட்டப்பரீட்சைக்கான இலவச பண்ணிசை பயிற்சி வகுப்பு சென்ற சனிக்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளன.

ஒவ்வொரு சனி, ஞாயிறு தினங்களிலும் மாலை 4 மணி முதல் 5 மணிவரை இவ்வகுப்பு நல்லை ஆதீனத்தில் நடைபெறும். இவ் வகுப்பினை பண்ணிசைப்புலவர் தாவடியூர் திரு. எஸ். ஆர். திருஞானசம்பந்தன் நடாத்திவருகிறார்.

ஆனைக்கோட்டை உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலய பரிபாலன சபையின் ஆதரவில் ஆலய மண்டபத்தில் இலவச பண்ணிசை வகுப்பு நடைபெற்றுவருகின்றது. (கெ.அ)

# பரிசுத்த பாப்பரசரின் 80-வது அகவை இன்று

யாழ்ப்பாணம், திங்கள்

உலகின் அரசியல் சார்பற்ற தலைவராகவும், கிறிஸ்தவ மக்களின் சமாதானத்தின் காவலனுகவும் விளங்கும் பரிசுத்த தந்தை 6 வது சின்னப்பரின் எண்பதாவது பிறந்த தினம் இன்று.

### சமாதனப்பிரியர்

உலக சமாதானத்தை நிலைநிறுத்துவதில் இன்று பரிசுத்த தந்தை அவர்கள் முன்னணியில் நிற்கின்றுர்கள். 23 வது அருளப்பர் உலக சமாதானத்திற்கு ஆற்றிய அளப்பரிய பணியை இன்னும் உலகு மறக்கவில்லை. அவ்வாறே 6வது சின்னப்பரும் ரொடீஷியப் பிரச்னை மத்திய கிழக்குப் பிரச்னை போன்றவற்றில் பல தீர்க்கமான ஆலோசனைகளை வழங்கி உள்ளார். சென்ற வருடத்தில்மட்டும் 45 முறை உலகத்தலைவர்களுக்கு பேட்டி அளித்துள்ளார். இவைகள் எல்லாம் போர் அபாயத்தை தணிக்கும் கருவிகளாக அமைந்துள்ளன.

### ஏழைகளின் நண்பன்

6வது சின்னப்பர் ஏழைகளின் நண்பராக திகழ்கின்றுர். அவருடைய போதனைகளில் செல்வந்தர்கள் பணம்படைத்த நாடுகள் வறியவர்களுக்கு உதவி உலகைச் சமன் செய்ய வேண்டுமென்னும் வேண்டுகோள் எதிரொலிப்பதைக் காணலாம். தேவையற்ற ஆடம்பரங்களை விடுத்து தேவைப்படுபவர்களுக்கு உதவும்படி அவர் தள்ளாத வயதிலும் பல வேண்டுதல்களை மன்றுட்டமாக விடுத்துள்ளார்.

இவ்விதமாக சமாதானத்திற்கும் அமைதியான வாழ்விற்கும் உலகுக்கு வழிகாட்டும் பரிசுத்த தந்தையின் 80ம் பிறந்த நாளையொட்டி வத்திகானிலுள்ள புனித இராயப்பர் பேராலயத்தில் அவர் சிறப்பு பலி பூஜை நடத்துவார் அன்றைய தினம் இத்தாலியின் 80 கலைஞர்கள் 80 அன்புக் காணிக்கைகளைச் சமர்ப்பிப்பர். அத்துடன் அனைத்துலக ஆயர் பேரவையின் பிரதிநிதிகளாக வத்திகானில் நிற்கும் உலகின் பலபாகங்களையும் சேர்ந்த 200 ஆயர்கள் வாழ்த்துக்களையும் பரிசில்களையும் அவருக்கு உவப்புடன் அளிப்பர். (கி-உ)

# திசைமாறி ஓடிய சவாரிவண்டி!

## மக்கள் சிதறிஓட்டம்; வயோதிபர் படுகாயம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

மாட்டுச்சவாரிப் போட்டியில் பங்குபற்றிய மாடுகளில் ஒருசோடி வெருண்டு திசை மாறி பார்வையாளர்கள் கூட்டத்திற்குள் புகுந்து ஓடியதினுல் வண்டிச்சில்லுக்குள் அகப்பட்ட வயோதிபர் ஒருவர் பலத்த காயங்களுடன் தெல்லிப்பளை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அளவெட்டி பிளுக்கை மைதானத்தில் நடைபெற்ற மாட்டுவண்டிச்சவாரிப் போட்டியில் இந்த மாடுகள் திசை மாறி மக்கள் கூட்டத்தினிடையே எதிர்பாராத விதமாக ஓடின. இதனுல் மக்கள் அங்கும் இங்குமாகச்சிதறி ஓடினுர்கள். இப்படி மக்கள் கூட்டம் ஓடியபோது சிலர் மேற்படி வண்டிலால் மோதப்பட்டு காயப்பட்டனர்.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த மார்க்கண்டு என்ற 65 வயது வயோதிபர்மீது வண்டில்சில்லு ஏறியதால் அவர்பலத்தகாயங்களுடன் தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

# பல்கலைக்கழக வளாகங்கள் அக். 17-ல் திறக்கப்படும்

கொழும்பு, ஞாயிறு

பலவாரங்களாக மூடப்பட்டிருந்த நாட்டின் சகல பல்கலைக்கழக வளாகங்களும் அடுத்த மாதம் 17ம் திகதி மீண்டும் திறக்கப்படவிருக்கின்றன.

யாழ்ப்பாணம் வளாகத்தைச் சேர்ந்த 200 சிங்கள மாணவர்களுக்கு இருப்பிட வசதியில்லாமையால் கொழும்பு, பேராதனை வளாகங்களில்அனுமதிக்கப் படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இம்மாணவர்களுக்கு விடுதி வசதி கிடைக்கும் வரை இந்த நடைமுறை இருக்கும் என தெரிவிக்கப்பட்டது. (உ)

தமிழர் புனர்வாழ்வுச்சபை

# கொடித்தினம் நடத்த அமைப்பாளர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், திங்கள்

பாதிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வுச் சபை அடுத்த மாதம் 14, 15ந் திகதிகளில் கொடித் தினம் நடத்தும் வகையில் தொகுதி ரீதியாக அமைப்பாளர்களை நியமிப்பது குறித்து திரு. ஜே ஜி. அரசரத்தினம் தலைமையில் கூட்டமொன்றை யாழ். பொது நூலக மேல் மாடியில் நடத்தியது.

இக்கூட்டத்தில் தொகுதி ரீதியாக நியமிக்கப்பட்ட அமைப்பாளர்கள் விபரங்கள் வருமாறு:

யாழ்ப்பாணம்: கே. எஸ். நடராஜன், நல்லூர்: டாக்டர் நடராஜா, காங்கேசன் துறை: வி பொன்னம்பலம், எஸ். கந்தையா, உடுப்பிட்டி-பருத்தித்துறை: பேராசிரியர் வி. க. கணேசலிங்கம், திரு. கே. நடனசபாபதி, மானிப்பாய்: வ. பொன்னம்பலம், திருமதி சச்சிதானந்தம், கிளிநொச்சி: வண. பிதா மைக்கேல், சாவகச்சேரி: எஸ். அம்பிகைபாலன். தீவுப்பகுக்குத் தீவுக்கு ஒருவராக 15 பேர் கொண்ட ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது (கா-உ)

# 5 குடும்பங்களை லோங் ஸ்தாபனம் ஏற்றது

உடுப்பிட்டி, ஞாயிறு

அனுராதபுரத்திலிருந்து கிளிநொச்சிக்கு அகதிகளாக வந்தவர்களில் 21 பேரடங்கிய ஐந்து குடும்பங்களுக்குக் கிளிநொச்சி லோங் ஸ்தாபனம் புகலிடமளித்துப் புனர் வாழ்விற்கான பொறுப்பை யேற்றுள்ளது. லோங் ஸ்தாபன அதிபர் வணபிதா மதுரநாயகம் அடிகளார் இந்த அகதிகளுக்குத் தங்குமிடமுமளித்துவேலை வாய்ப்புக்களும் வழங்கியுள்ளார். (ஆ)

நத்தார். புத்தாண்டை ஒட்டி

# மூன்று கோடி யார் துணிவகைஇறக்குமதியாகும்

கொழும்பு, ஞாயிறு

எதிர்வரும் நத்தார், புத்தாண்டு கொண்டாட்டங்களின் பொருட்டு பொது மக்கள் போதுமான அளவு புடவை வகைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வர்த்தக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

வர்த்தகர்கள், துணிவகைகளைப் பெறுவதில் செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தாத வகையிலும் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

சலுசலா நிறுவனம் 2 கோடி யார் சிந்தெட்டிக் துணியையும், 1 கோடியார் பருத்தித் துணியையும் இறக்குமதி செய்யவிருக்கிறது.

சந்தையில் தற்போது கையிருப்பில துணிவகைகள் இருக்கின்ற போதிலும் சிந்தெட்டிக் பருத்தித்துணிகளைப் பொது மக்கள் விரும்பும்வகையில் பெறுவதில் கஷ்டம் ஏற்பட்டுள்ளது என அமைச்சு தெரிவித்துள்ளது. (உ)

## கட்டிடம்

உடுப்பிட்டி, ஞாயிறு

கட்டைவேலி, நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மூன்று லட்சம் ரூபா செலவில் இரண்டு மாடிக் கட்டிடம் நிறுவப்பட்டு வருகின்றது இப்புதிய கட்டிடம் நவீன வசதிகளைக் கொண்டிருக்குமென்றும் இரண்டாவது மாடியில் நெல்லியடி மக்கள் வங்கிக்கிளை இயங்குமென்றும் தெரிவிக்கப் படுகின்றது. சிமேந்து தட்டுப்பாடுகாரணமாகத் தற்போது தற்காலிகமாகக் கட்டிடவேலைகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

**மணிவாக்கு**

அறிவாளியின் கையிலுள்ள மையின் கறை தியாகியின் இரத்தக்கறையைவிடப் புனிதமானது. - முகமதுநபி

ஈழநாடு
The Eelanaadu

## பேச்சுவார்த்தை

பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரச்னைகளைத் தீர்க்கலாம்.

இது, எல்லோரும் எப்போதும் சொல்லிக்கொள்ளும் வார்த்தை.

யார் யாரைப் பேசுவதற்கு அழைப்பது, எந்த அடிப்படையில் பேச்சுக்களைத் தொடங்குவது; பேச்சுவார்த்தையில் யார் யார்; எங்கெங்கே அமர்ந்திருப்பது?

இத்தனை கேள்விகளுக்கும் பின்னர்தான் பேச்சுவார்த்தை.

இதற்காகத்தான் வட்டமேசை மாநாடே ஆரம்பமாகியிருக்கவேண்டும்.

'இலங்கையிலுள்ள தமிழ்மக்களுக்குப் பிரச்னைகளே இல்லை; அவை தீர்க்கப்பட்டுவிட்டன,''

''இந்தப்பிரச்னைகளுக்குப் போராட்டத்தினுல் தீர்வு காணமுடியாது; பேச்சுவார்த்தைமூலம்தான் தீர்வு காணமுடியும்''

''பேச்சுவார்த்தைக்கு எப்போதும் கதவுகள் திறந்திருக்கின்றன.''

''தங்கள் கோரிக்கையைக் கைவிட்டுத் திறந்தமனத்துடன் வந்தால்தான் பேச்சுவார்த்தை''.

இவைபோன்ற அறிக்கைகளும் பேச்சுக்களும் செய்திகளும் கடந்த சில வருடங்களாகப் பார்த்துக்கேட்டுப் புளித்துப்போனவை.

இந்த வருடத் தொடக்கத்தில் எல்லோருமே தமிழர் பிரச்னைக்கு நியாயமான நிரந்தரமான தீர்வு காண்பதற்கு முயற்சி செய்தனர்.

ஆனல் சகல பிரச்னைகளுக்கும் நியாயமான தீர்வு காண்பதற்கு உறுதியளித்த திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைத் தலைவராகக்கொண்ட ஐக்கியதேசியக்கட்சியை மக்கள் மிகப் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிபீடத்துக்கு அனுப்பிவைத்தனர்.

ஆட்சிபீடத்தில் அமர்ந்ததும் இதுவரை எவரும் எந்தக்கட்சியும் எதிர்நோக்காத பெரும் கலவரங்களை திரு. ஜே. ஆர். எதிர்நோக்கவேண்டியேற்பட்டது

ஆனலும் எதற்கும் கலங்காமல் பிரச்னைகளுக்குத் தீர்வு காணவேண்டுமென்ற ஒரே இலட்சியத்துடன் பிரதமர் ஜே. ஆர். கடமையாற்றப் புறப்பட்டுவிட்டார் என்பதையே அவரது சொல்லும் செயலும் இதுவரை எடுத்துக்காட்டுகின்றன.

தமிழர்விடுதலைக் கூட்டணிதான் தமிழ்மக்களின் பெரும்பான்மையான மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கின்றதென்பதை சரியாக உணர்ந்து அவர்களை அழைத்துப் பேசி உடனடிப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண முன்வந்த பிரதமரைப் பாராட்டவேண்டும்.

பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்னைகளுக்குத் தீர்வு காணலாம் என்பதை திரு. ஜே. ஆர். நிரூபிப்பார் என்று நம்பலாம்.

# அமரர் பண்டாரநாயகா சிரார்த்த தினம் இன்று

(கொழும்பு)

காலஞ்சென்ற பிரதமர் அமரர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகாவின் 18-வது சிரார்த்த தினம் இன்று நாடெங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது.

ஹொரகொல்லையில் அமரர் பண்டாரநாயகாவின் சமாதிக்கு திருமதி பண்டாரநாயகாவும் அவரது மூன்றுபிள்ளைகளும் அஞ்சலி செலுத்துவர்.

டார்லி வீதியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமைக் காரியாலயத்தில் இரவில் 'பிரித்' ஓதுவது ஆரம்பமாகியுள்ளது. விஜேராம மாவத்தையில் உள்ள விப்பாசன நிலையத்தில் 78 பிக்குகளுக்கு அமரரின் சிரார்த்த தினத்தை ஒட்டி தானம் வழங்கப்படவிருக்கிறது.

ஹொரகொல்லையில் அமரரின் சமாதியில் நாளைக்காலை இரு நிமிட மௌனஞ்சலியும் செலுத்தப்படும்.

திருமதி பண்டாரநாயகா, பிள்ளைகள், உறவினர்கள், ஜனுதிபதி சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் ஆகியவர்களுடன் தொழிற்சங்கங்கள், இளைஞர், மகளிர் முன்னணிகள் மற்றும் அமைப்புகள் என்பன அஞ்சலியில் கலந்து கொள்ளும். செவ்வாய்க்கிழமை பிற்பகல் கொழும்பு புதிய நகர சபை மண்டபத்தில் முன்னுள் அமைச்சரும், சுதந்திரக்கட்சியின் ஸ்தாபக உருப்பினருமான திரு. ஏ. பி. ஜெயசூரியா தலைமையில் அஞ்சலிக் கூட்டம் ஒன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (உ)

# பொதுத்தொண்டில் இளைஞர் தம்மை ஈடுபடுத்தவேண்டும்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

''இன்றைய சூழ்நிலையில் இளைஞர்கள் மனக்கட்டுப்பாட்டுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் வாழ்வதற்குப் பழகிக்கொள்ளவேண்டும். கிராமங்களிலுள்ள பொது இயக்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றில் இளைஞர்கள் தம்மை ஈடுபடுத்தி எதிர்காலச் சுபிட்சத்திற்கு வழிகாண வேண்டும். கிராம ரீதியில் ஏற்படும் முன்னேற்றமே எமது தமிழ்ப் பிரதேசங்களின் சுபிட்சமாகும்.''

இவ்வாறு அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு குறிப்பிட்டார். கழகத் தலைவர் ஆசிரியர் திரு. எஸ். சிவராசா தலைமையில் விழா நடைபெற்றது. காங்கேசன் துறைத் தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் திரு. எஸ். கே. என். சிவராசாவும் பேசினர். (அ)

## சுவீப்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 30 H 0591 | 42 H 0350 |
| 52 H 0857 | 13 J 0622 |
| 35 J 0621 | 58 J 0212 |
| 07 K 0080 | 09 K 0841 |
| 13 K 0834 | 32 K 0900 |
| 44 K 0011 | 60 K 0472 |
| 25 L 0784 | 28 L 0191 |
| 30 L 0846 | 40 L 0083 |
| 60 L 0559 | |
| 26 M 0556 | 28 M 0468 |
| 40 M 0701 | 43 M 0759 |
| 08 N 0836 | 29 N 0006 |
| 40 N 0718 | 43 N 0649 |
| 52 N 0795 | 20 O 0333 |
| 20 O 0762 | 34 O 0952 |
| 38 O 0584 | 42 O 0625 |
| 55 O 0893 | 22 P 0572 |
| 29 P 0683 | 53 P 0542 |
| 60 P 0949 | 58 Q 0469 |
| 59 Q 0351 | 38 R 0025 |
| 47 R 0679 | 59 R 0376 |
| 39 S 0906 | 57 S 0159 |
| 24 T 0649 | 34 T 0689 |
| 36 T 0569 | 51 T 0674 |
| 52 T 0191 | 52 T 0330 |
| 16 U 0710 | 47 V 0141 |
| 04 W 0818 | 3[illegible] W 0624 |
| 36 W 0919 | 43 W 0446 |
| 55 W 0572 | 59 W 0698 |
| 11 X 0052 | 43 X 1000 |
| 01 Y 0966 | 06 Y 0711 |
| 35 Y 0909 | 18 Z 0126 |
| 21 Z 0764 | 52 Z 0421 |
| 60 Z 0539 | |

[இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை.] (ம)

## மின்சாரம் தாக்கி இளைஞர் பலி

யாழ்ப்பாணம், திங்கள்

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் ஏற்பட்ட மின்சார ஒழுக்கினுல் சுண்டிக்குழி குருசோல் வீதியைச் சேர்ந்த செல்லையா துரைசிங்கம் என்பவர் (31 வயது) மின்சாரம் தாக்கி மரணமானுர்.

இன்று திறக்கப்படவிருந்த அச்சுவேலி கைத்தொழில் பேட்டை இதன்காரணமாகப் பின்போடப்பட்டுள்ளது.

## இன்று

யாழ்ப்பாணம், திங்கள்

பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்கழகம் அமைச்சர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்து ஆராய்வதற்காக இன்றுகாலை 10மணிக்கு யாழ். ட்றிம்மர் மண்டபத்தில் கூடுகிறது.

நாட்டில் நடைபெற்ற வன்செயல்களால் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்கள் நிலைகுறித்து கழகம் அண்மையில் சில முக்கிய அமைச்சர்களைச் சந்தித்து பேசியது தெரிந்ததே.

அமைச்சர்களுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகள் தொடர்பான தீர்க்கமான முடிவுகள் இன்றைய கூட்டத்தில் எடுக்கப்படும்.

ஐ. நா.வில் வியட்நாம்

# 'நீதிக்கு கிடைத்த வெற்றி' சீன கருத்து

பீக்கிங், செப். 25

ஐ. நா. சபையில் வியட்நாமுக்கு அங்கத்துவம் கிடைத்துள்ளதை ''நீதிக்குக் கிடைத்த வெற்றி'' என்று சீனு வரவேற்றுள்ளது.

இதுபற்றி 'நவசீன' செய்தி ஸ்தாபனம் 'நீதியைக் கடைப்பிடித்த மக்களின் வெற்றி இது' என்று கூறியுள்ளது.

ஐ. நா. சபையில் வியட்நாம் 149 வது அங்கத்துவ நாடாகச் சேர்ந்துக்கொள்ளப்பட்டுள்ளது தெரிந்ததே. (உ)

## 5 குடும்பங்கள்

கிளிநொச்சி, ஞாயிறு

கிளிநொச்சிக்கு நேற்று ஐந்து குடும்பங்கள் அகதிகளாக வந்துள்ளன. இவர்கள் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரியின் காரியாலயத்தில் தங்கியுள்ளார்கள்.

## அச்சுவேலி....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

உதயணன் (15 வயது) நாராயணசாமி அருமைசந்திரன் (29 வயது) ஆகியோர் இடம் பெற்றனர். இவர்களை அடையாளம் காட்டவந்த 8 சாட்சிகளும் எவரையும் அடையாளம் காட்டவில்லை.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி இ. வி. விவேகானந்தன், சட்டத்தரணி ஜி குமாரலிங்கம், சட்டத்தரணி கனக மனேகரன் ஆகியோர் ஆஜரானுர்கள்.

சந்தேகநபர்சார்பில் சட்டத்தரணி இ. வி. விவேகானந்தன் கொழும்பு நீதிமன்றத்திற்கு, இவ்வழக்கை விசாரணைசெய்ய நியாயாதிக்கம்இல்லையென்றும் சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டதை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுஒன்று தாக்கல்செய்யப்பட்டுள்ளதாகவும், ஆட்சேபங்களை கிளப்பினுர். இந்த ஆட்சேபங்களை குறித்துகொள்வதாக பதில்நீதிபதி தெரிவித்தார்.

கொழும்பு 1ம் நீதிமன்றத்தில், மானிப்பாய் வங்கி கொள்ளை, புத்தூர் துப்பாக்கி சூடு தொடர்பான அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

மானிப்பாய் வங்கி கொள்ளை தொடர்பான அணிவகுப்பிற்கு வந்த சாட்சிகள், சந்தேகநபர் எவரையும் அடையாளம் காட்டவில்லை.

புத்தூர் துப்பாக்கி சூடு சம்பவம் தொடர்பாக நடந்த அணிவகுப்பில், சாட்சி சந்தேகநபரான மோகன் என்றழைக்கப்படும் சு. நகுலேஸ்வரனை அடையாளம் காட்டினுர்.

சந்தேக நபர்கள் சார்பில், சட்டத்தரணிகளான இ. வி. விவேகானந்தன், ஜி. குமாரலிங்கம், கனக மனேகரன் ஆகியோர் ஆஜரானுர்கள்.

சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி இ. வி. விவேகானந்தன், இவ்வழக்கை விசாரணை செய்ய கொழும்பு நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கம் இல்லையென்றும், இரகசிய பொலிஸார் சந்தேகநபர்களை புகைப்படம் எடுத்துள்ளதாகவும் ஆட்சேபம் தெரிவித்தார்.

பதில் நீதிபதி பருக், இந்த ஆட்சேபனைகளை, கொழும்பு பிரதம நீதிபதி முன்னிலையில் தெரிவித்திருக்க வேண்டும் எனக்கூறினுர்.

அடையாள அணிவகுப்பு 27-ம் திகதியே நடைபெறவிருந்ததாகவும், இன்ஸ்பெக்டர் பஸதியாம்பிள்ளை ரகசியமாக மனு ஒன்றை சமர்ப்பித்து நான்கு நாட்களுக்கு முன் 23-ம் திகதி அடையாள அணிவகுப்பிற்கு ஏற்பாடு செய்திருந்தார் என்று சட்டத்தரணி இ. வி. விவேகானந்தன் தெரிவித்தார். (க)

## 30-ந் திகதி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேறியது.

இடமாற்றம் பெற விரும்பும் ஆசிரியர்கள், இலங்கை ஆசிரியர் சங்க யாழ்ப்பாண மாவட்டக் கிளை மூலம் கல்வித் அமைச்சுக்குச் சகல விபரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டது.

இடமாற்றத்திற்கான விண்ணப்பப் படிவம் இக்கூட்டத்தில் வழங்கப்பட்டது.

ட்றிம்மர் மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை காலை நடைபெறவிருக்கும் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர் சங்கக் கூட்டத்தில் பாதிக்கப்பட்ட சகல ஆசிரியர்களும் கலந்து கொள்ளவேண்டுமெனத் தலைவர் திரு. எஸ். கே. சுந்தரலிங்கம் வேண்டுகோள் விடுத்தார். (ஞ)

## நடவடிக்கை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யும் அரசாங்க, கூட்டுத்தாபனங்களில் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு போதியதல்ல என்று கருதுவதாகவும், முற்றுக வேலைக்கு திரும்பமுடியாதவர்

## நாடும் நடப்பும்

யாழ். மாவட்ட பொலிஸ் அதிபராக அடுத்தமாதம் முதல் தேதியன்று பதவியேற்கவிருக்கும் திரு ரன்முத்துகல கொழும்பிலும் மற்றும் பல மாவட்டங்களிலும் கடமையாற்றி அனுபவமுள்ளவர். கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பவர். அதேசமயம்கண்டிப்பானவரும் என்றும் கேள்வி.

திரு. ரன்முத்துகல தமிழில் தான் தமது துணையைத்தேடிக் கொண்டவராம்! அதாவது திரு. ரன்முத்துகலவின் மனைவியார் ஒரு தமிழ்ப்பெண்மணி! வீட்டில் சமஅந்தஸ்து என்றுல் நாட்டிலும் அது நிலைபெறவேண்டுமல்லவா?

சரியான ஆளைத்தான் யாழ். மாவட்டத்துக்குப் பொலீஸ் அதிபராகத் தேர்ந்தெடுத்திருக்கிறுர்கள்.

0 0 0

பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவைப்பற்றி 'பூச்சாண்டி' காட்டி வந்தவர்கள் தான் அதிகம் ஆனல் இன்றுள்ள ஜே. ஆர். பழைய ஜே. ஆர். அல்ல என்று பலரும் சொல்லுமளவுக்கு அவர் நடந்துகொள்கிறுர்.

தேசிய அரசுப் பேரவையில் அரசியலமைப்புக்குத் திருத்தம் கொண்டுவந்து நிகழ்த்திய உரை பலரையும் மூக்கின்மேல் விரலை வைக்கச்செய்துள்ளது.

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் மற்றும் பௌத்த நிறுவனங்கள் 1956ம் ஆண்டின் பின்னர் தமது மாநாடுகளில் கொண்டுவந்து நிறைவேற்றும் தீர்மானங்களும் கூறும் ஆலோசனைகளும் செய்திப்பத்திரிகைகளில் அடிக்கடி வெளிவருவன.

கல்வியில் தரப்படுத்தலை நீக்குவதென்று அரசாங்கம் செய்த முடிவை ஆட்சேபித்துச் சென்ற தூதுகோஷ்டிக்குப் பிரதமர் ஜே. ஆர். சொடுத்த பதிலும் அதுபற்றி பிரதமர் தேசியஅரசுப் பேரவையில் ஒளிவு மறைவின்றி எடுத்துக்கூறியதும் அவரது துணிச்சலையே காட்டுகின்றது

ஜனநாயக முறைப்படி நடந்த தேர்தலில் ஜனநாயக முறையில் அமோக வெற்றியீட்டிய ஜே. ஆர். தலைமையிலான அரசாங்கத்துக்கு எதிராக நெருக்கடியை ஏற்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட சகல முயற்சிகளையும் ஆவேசப்படாமல் அமைதியான முறையில் தன்னம்பிக்கையை மட்டுமே வைத்துச் சமாளித்து வெற்றி கண்டுவரும் திரு. ஜே ஆர். ஜயவர்த்தனவை ''இலங்கையின் இரும்பு மனிதர்'' என்று கூடச் சொல்லலாம்.

பிரான்சின் ஆதிக்கத்திலிருந்த அல்ஜீரியா விடுதலைக்காக பெரும் போராட்டம் நடத்தியபோது அதற்கு விடுதலை அளிப்பதற்கு அப்போதைய ஜனுதிபதி டிகோல் சம்மதித்தார்.

அல்ஜீரியாவில் குடியேறி ஆதிக்கம் செலுத்திவந்த பிரெஞ்சுக்காரர் இதை எதிர்த்துப் பெரும் போராட்டம் நடத்தியதுமட்டுமல்ல டிகோல் ஆட்சியையே கவிழ்க்க முற்பட்டனர், நீண்ட மூக்கையுடைய டிகோல் அத்தனை பேரையும் சுற்றிவளைத்து உள்ளே போட்டுத் தனது இலட்சியத்தில் வெற்றிபெற்றுர்.

பிரதமர் ஜே. ஆரும் இலங்கையின் டிகோல் என்ற பெயரைப் பெறுவார் என்பதற்கான நல்ல அறிகுறிகள் தென்படுகின்றன.

— ஊர்சுற்றி

களுக்கு அவர்கள் விரும்பும் பட்சத்தில் ஓய்வுபெற அரசு வசதி செய்ய வேண்டுமென்றும் மேலும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்த் தொழிற் சங்கக் கூட்டணியின் பொதுச்செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. (ம)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.